# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2048 ● நவம்பர் 4, 2017 Weekly E-paper ● November 4, 2017


# கமல்ஹாசன் தீவிரவாதியா?

● சுப.வீரபாண்டியன்



ஆனந்தவிகடன் வார இதழில், கமல்ஹாசன் ஒரு தொடர் எழுதி வருகின்றார். அதில் இந்தவாரம், கேரள முதல்வர் பினராயி விஜயனுக்கு அவர் விடுத்துள்ள விடை ஒன்றில், "எங்கே ஓர் இந்துத் தீவிரவாதியைக் காட்டுங்கள் என்ற சவாலை இனி அவர்கள் விட முடியாது. அந்த அளவுக்கு அவர் கூட்டத்திலும் தீவிரவாதம் பரவியிருக்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக அவர் மீது வாரணாசி நீதிமன்றத்தில், ஐந்து பிரிவுகளின் கீழ் வழக்குத் தொடுக்கும் முயற்சி நடைபெறுகிறது. பாஜகவைச் சேர்ந்த ராமசுப்பிரமணியன், புதிய தலைமுறை தொலைக்காட்சியில், குஷ்புவின் மீது பல்வேறு நீதிமன்றங்களில் வழக்குத் தொடுத்ததை நினைவு படுத்துகின்றார். அதாவது கமல் மீதும் பல ஊர்களில் வழக்குத் தொடரும் எண்ணம் உள்ளது என்ற உண்மை வெளிவந்துள்ளது.

இதனைத் தாண்டி, கமல், தீவிரவாதிகளின் ஆதரவாளர் ஆகிவிட்டார் என்றும் அவர்கள் கூறி வருகின்றனர். கமலே ஒரு தீவிரவாதி, அவரைக் கைது செய்யுங்கள் என்று சொல்லும் அடுத்த கட்டத்திற்கு பாஜகவினர் சென்றாலும் வியப்படைய ஒன்றுமில்லை.

உண்மையில், கமலின் விடை சரியான அழுத்தம் உடையதாக இல்லை என்றே கூற வேண்டும். ஏதோ இப்போதுதான், இந்துமத அடிப்படைவாதிகள் தீவிரவாதிகள் ஆகியுள்ளது போல அவர் சொல்லியிருக்கிறார். அதற்கே அவர்கள் தாண்டிக் குதிக்கின்றனர். வன்முறையில் மட்டுமே நம்பிக்கை உள்ள மத அடிப்படைவாதக் குழுக்களே அவர்களிடம் மிகுதி. அன்று தொடங்கி இன்று வரையில் வன்முறையில் வளர்ந்தவை தான் ஆர்.எஸ்.எஸ். போன்ற இயக்கங்கள். பாபர் மசூதி இடிப்பு, குஜராத் படுகொலைகள் இவற்றைத் தாண்டி, பகல்பூர், மாலேகான் குண்டுவெடிப்பு, மாட்டுக்கறி வைத்திருந்தார் என்ற தவறான தகவலின் அடிப்படையில் ஒரு பெரியவரை அடித்தே கொன்றது என ஆயிரம் எடுத்துக்காட்டுகள் உள்ளன.

நரேந்திர தோபால்கர், கோவிந்த் பன்சாரே, கல்புர்கி, கௌரி லங்கேஷ் ஆகிய நான்கு எழுத்தாளர்களைச் சுட்டுக்கொன்ற துப்பாக்கிகள் எவை? தமிழ்நாட்டில், மண்டைக்காடு கலவரத்தில், ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் பங்கு இருந்தது என்பதை நீதிபதி வேணுகோபால் குழு வெளிப்படையாகவே சுட்டியிருந்தது.

இவ்வாறு, இந்துமத அடிப்படைவாதிகளின் தீவிரவாதம் ஊறறிந்த ஒன்று. இதற்கும், தங்களை இந்துக்கள் என்று கருதிக்கொண்டிருக்கும் கோடிக்கணக்கான மக்களுக்கும் எந்தத் தொடர்புமில்லை. அதே போலத்தான், குண்டு வெடிப்பு போன்ற தீவிரவாதச் செயல்களில் ஈடுபடும் யாரோ ஒரு சில இஸ்லாமியர்களுக்கும், இஸ்லாமிய மக்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. ஆனால் அங்கே மட்டும் சற்றும் கூசாமல், 'இஸ்லாமியத் தீவிரவாதம்' என்னும் தொடரைப் பயன்படுத்துகின்றனர்.

சரி, இப்போது கமலை ஏன் மிரட்ட முயல்கின்றனர்? இது கமலை மிரட்டுவதன்று. கருத்துரிமையை மிரட்டுவது. யாரும் எங்களைப் பற்றிப் பேசிவிடக் கூடாது. திரைப்படத்தில் கூட, ஜி.எஸ்.டி வரியைப் பற்றி விமர்சனம் செய்யக் கூடாது என்னும் சர்வாதிகாரப் போக்கே இது.

பா.ஜ.க.வின் இந்தப் போக்கை, அவர்ளுக்கு ஆதரவாக இருந்தவர்களே இன்று புரிந்து எதிர்க்கத் தொடங்கியுள்ளனர். நான்கு மாதங்களுக்கு முன்பு வரை ஆதரவான கருத்துகளை எழுதிய வரலாற்றாசிரியர் ராமச்சந்திர குஹா, "மோடியின் சர்வாதிகாரப் போக்கை" இப்போது கண்டித்துள்ளார். சென்ற தேர்தலில் அவர்களுக்காக வாக்குகளைக் கேட்ட மூத்த வழக்கறிஞர் ராம் ஜெத் மலானி, தன் செய்கைக்காக மக்களிடம் இப்போது மன்னிப்பு கேட்டுள்ளார்.

அடக்கி ஒடுக்கி அனைவரையும் அடிபணிய வைத்துவிடலாம் என்னும் காலம் மலையேறிவிட்டது. அடிக்க அடிக்கப் பந்து எழும் என்பதுதான் அறிவியல். அதனை அவர்கள் உணர வேண்டும். நமக்குள் இருக்கிற சிற்சில வேறுபாடுகளை மறந்து, பாசிசத்திற்கு எதிராகவும், கருத்துரிமைக்கு ஆதரவாகவும் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்தால்தான் நாடு பிழைக்கும் என்பதை ஜனநாயகவாதிகளும் உணர வேண்டும்.●

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

நிர்வாக ஆசிரியர்கள்
**சிற்பி செல்வராஜ்**
**கி.செந்தில்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keertru.com**

சுபவீ வலைப்பூ
**www.subavee.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

## காஞ்சி–அனைத்துக் கட்சி கூட்டம்




பிரதமர் மோடியால், 500-1000 ரூபாய் செல்லாது என அறிக்கப்பட்டு, இந்தியப் பொருளாதாரச் சீரழிசை ஏற்படுத்திய நவம்பர் 8ஆம் நாளை கறுப்பு தினமாக அறிவிப்பது குறித்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் காஞ்சி மாவட்டத் தி.மு.கழகம் கூட்டியது. 28.10.2017 அன்று பொத்தேரி எஸ்.ஆர்.எம். ஓட்டலில் கூடிய இக்கூட்டத்திற்கு காஞ்சி மாவட்டத் தி.மு.க. செயலாளர் தா.மோ.அன்பரசன் தலைமை தாங்கினார். திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பில் மாவட்டச் செயலாளர் இளமாறன், துணைச் செயலாளர் அன்பு ஆகியோர் கூட்டத்தில் கலந்து கருத்துரை வழங்கினார்கள்.

## சண்முகநாதன் இல்ல மணவிழா




01.11.2017 அன்று காலை, குன்றக்குடியில் நடைபெற்ற, தோழர் சண்முகநாதன் மகள் திருமணத்தை, குன்றக்குடி அடிகளார் தலைமையில், தோழர் சுபவீ நடத்தி வைத்தார். சாமி.திராவிடமணி, பிராட்லா, இளைய கௌதமன் ஆகியோர் திருமண விழாவில் கலந்துகொண்டனர்.

## நூல் அறிமுக விழா!

**"கம்பரின் மறுபக்கம்"**

| | |
|---|---|
| நாள் | : 04.11.2017 சனிக்கிழமை மாலை 6 மணி |
| இடம் | : வி.கே.என். கட்டிடம், சுப்பிரமணியபுரம், காரைக்குடி |
| வரவேற்புரை | : வைகறை |
| தலைமை | : சாமி.திராவிடமணி |
| சிறப்புரை | : சுப. வீரபாண்டியன் |
| ஏற்புரை | : புலவர் ஆ. பழனி |

**அனைவரும் வருக!**




*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்




## குளிர்விட்டுப் போன அரசு

“நீரின்றி அமையாது உலகு” என்பது தமிழ்ச் சிந்தனை, உலகின் நியதி. இங்கே உலகு என்பதில் அரசும் அடங்கும்.

மக்களின் வாழ்வாதாரத்தில் முக்கியமான ஒன்று நீர். நீரைத் தேக்கிப் பாதுகாப்பது, அதை வகுத்து மக்களுக்கு வழங்குவது அரசின் கடமை. தமிழக அ.தி.மு.க. அரசுக்கு இந்த அறிவு 2015இலும் இல்லை, இப்பொழுதும் இல்லை.

ஒரு மாதத்திற்கு முன்னர் இருந்தே இப்பொழுது பெய்யும் வடகிழக்குப் பருவமழை குறித்தும், அதன் வலிமை குறித்தும் வானிலை ஆய்வு மையம் தெளிவாகச் சொல்லி வந்திருக்கிறது.

வருமுன் காக்க வேண்டும் என்பதனால் ஏரி, குளங்களைத் தூர்வார வேண்டும், நீர் வழிப் பாதையை செப்பனிட வேண்டும், ஆகாயத் தாமரைகளை அகற்றி கரைகளை வலிமைப் படுத்த வேண்டும். பருவ மழைக்கு முன்னர் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என வலியுறுத்தி வந்தார் எதிர்கட்சித் தலைவர் ஸ்டாலின்.

இரட்டை இலைக்குச் சண்டை. எம்.ஜி.ஆர் பெயரை வைத்து திருவிழா கூத்தாடிய எடப்பாடி அரசின் கையாலாகாத தனத்தால். இன்று சென்னை மழைநீரில் மிதக்கிறது.

வீடுகளில், தொழிலகங்களில் மழை நீர் புகுந்துள்ளது. மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி அல்லல் படும் அலங்கோலம். முறையாகத் தூர்வாரி நீர்வழிப் பாதையைச் செப்பனிடாத காரணத்தால் மூழ்கிக்கிடக்கும் பயிர் நிலங்கள், மழைநீரோடு கழிவு நீர் கலந்து குப்பைகள் மிதப்பதால் அடிக்கும் நாற்றத்தோடு நோய் பரவும் அபாயம்.

இப்படி தலைக்கு மேல் வெள்ளம் ஏறிய பிறகு எடப்பாடி அறிவிக்கிறார், தாழ்வான பகுதியில் தேங்கிய நீரை வெளியேற்ற 1,100 கோடி ஒதுக்கியுள்ளாராம். இப்படி ஒரு முதல்வர்?!

கொடுப்பதும் மழை. கெடுப்பதும் மழை என்கிறார் வள்ளுவர்.

கொடுக்கும் மழையைத் தேக்கி, நெறிப்படுத்தி மக்களுக்குக் கொடுத்திருந்தால் அங்கே மழையின் கெடுதலைத் தவிர்த்திடலாம் என்ற அறிவுடமை இங்கே வள்ளுவரின் நுட்பமான கருத்து.

இதெல்லாம் கருத்தில் கொண்டு, காலம் அறிந்து செயல்படத் தெரியாத ஒருவர் அல்லவா தமிழ்நாட்டின் முதல்வராக இருக்கிறார்.

2015ஆம் ஆண்டு பெய்த மழையால் செயலிழந்த சென்னை, இப்பொழுது நீரில் மிதக்கிறது. கடற்கரையில் மணலைக் காணவில்லை. அவ்வப்போது மின்சாரம் காணாமல் போய்விடுகிறது.

எருமை மாட்டின் மேல் மழை. அரசு இயந்திரம் மிதக்கிறது நீரில். செயலிழந்தது அரசு.

நாடே குளிரில் நடுங்குகிறது. ஆனால் தமிழக முதல்வருடன் அமைச்சர்களுக்கும் குளிர்விட்டுப் போய்விட்டது.

‘ஜன்னி’ கண்டிருக்கும் தமிழக அ.தி.மு.க. அரசுக்கு விரைவில் மக்கள் மருத்துவம் பார்க்க இருக்கிறார்கள்.

# வண்ணங்களின் அரசியல்



சுபவீ

அண்மையில் இரண்டு திருமணங்கள், தமிழ்த்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில், நான் நடத்தி வைத்தவை. ஒரே மேடையில் காவியும் கருப்பும் இணைந்திருந்தது புதிதன்று. அறிவாசான் அய்யா பெரியார் அவர்களும், மறைந்த அறிஞர் தமிழ்த்திரு பெரியவர் குன்றக்குடி அடிகளாரும் பல மேடைகளில் இணைந்து பங்கேற்றுள்ளனர். எனினும் இப்போது நண்பர்கள் சிலர் புதியகேள்வி ஒன்றை எழுப்பினர்.

காவி என்பது துறவறத்தின் அடையாளம். கருப்பு என்பது துக்கத்தின் அடையாளம். இல்லறம் ஏற்கும் மகிழ்ச்சி நிறைந்த மணவிழாவில், அதற்குப் பொருந்தாத இரண்டு வண்ணங்கள் இணைந்து நின்றது பற்றிய ஒரு நெருடல் அவர்களிடம் இருந்தது.

வண்ணங்கள் இயற்கையானவை. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வண்ணம். ஆனால் நாம்தான் வண்ணங்களுக்கு நம் எண்ணங்களைப் பூசிப் புதுப்புதுப் பொருள்களைக் கொடுத்துள்ளோம். அதே நேரம் நாம் இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். ஒவ்வொரு வண்ணத்திற்கும் வேறுபட்ட, சில வேளைகளில் நேர் எதிரான பொருள்களையும் நாம் கூறி வருகின்றோம்.

பச்சை என்றால் பசுமை, வளம் ஆகியனவற்றின் குறியீடு என்பது பொதுவான எண்ணம். ஆனால், "அவன் பச்சை பச்சையாய்ப் பேசுகிறான்" என்றால், அங்கு பச்சைக்குப் பொருள் வேறு. மஞ்சள் நிறத்தை மங்களம் என்கின்றனர். ஆனால் 'மஞ்சள் ஏடுகள்' மங்கலமானவை அல்ல. நீல வானமும், கடல் நீலமும் நமக்கு மகிழ்ச்சி தருகின்றன. ஆனால், 'நீலப் படங்கள்' கேடு தருபவை.

சிவப்பு என்பது புரட்சிக்கும், பொதுவுடைமைக்கும் மட்டுமின்றி, ஆபத்துக்கும் அடையாளமாக உள்ளது. வெண்மை, தூய்மை மற்றும் சமாதானத்தை மட்டும் குறிக்காது. 'சமரசம்' செய்துகொள்வதற்கும் அதுதான் அடையாளம்.

**கருப்பும் அப்படித்தான். கருப்பு துக்கம் என்றால், அய்யப்பன் கோயிலுக்குப் போகின்றவர்கள் ஏன் கறுப்புடை அணிந்து கொள்கின்றனர்? நீதிமன்றங்களில் வழக்கறிஞர்கள் மட்டுமில்லாமல், நீதிபதிகளும் கருப்பு அங்கிகளை அணிவது ஏன்? அவர்கள் எல்லோரும் அவ்வளவு துக்கமானவர்களா?**

***அங்கே நீதி கோரும் வண்ணம் கருப்பாக இருக்கிறது. நீதி கோருவோர் கறுப்புடையில் இருக்கலாம் என்றால், சமூக நீதி கோருவோர் மட்டும் அந்த உடையை அணியக்கூடாதா என்ன?***

அவரவருக்குப் பிடித்த வண்ணங்களை அவரவர் அணிந்து கொள்வோம்! வண்ணங்களைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை.●

# பசுக்கறியா மாட்டுக்கறியா?

கடந்த 30 ஆம் தேதி காலையில், புதிய தலைமுறை தொலைக்காட்சியில் நடைபெற்ற கலந்துரையாடலில், நானும், பாஜகவைச் சேர்ந்த திரு நாராயணனும் கலந்துகொண்டோம். அப்போது அவர் ஓர் அறைகூவலை முன்வைத்தார். மாட்டுக்கறித் திருவிழா நடத்தும் யாராவது துணிவிருந்தால் பசுக்கறித் திருவிழா நடத்துங்கள் பார்ப்போம் என்றார். அதற்கு நான் சரியான விடையை அங்கு சொல்லாமல் விட்டுவிட்டேன். அது என் பிழையே!

மறுநாள் தோழர் நலங்கிள்ளி தொலைபேசியில் அழைத்து, இறைச்சிக்காக மாடு வெட்டுதல் குறித்து, அரசமைப்புச் சட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளில் இருப்பதாகச் சொன்னது சரிதான். ஆனால் அதனை இன்னும் சற்று விளக்கமாகச் சொல்லியிருக்கலாமே என்றார். பிறகு அவரே அதனை விளக்கவும் செய்தார்.

வழிகாட்டு நெறிமுறைகள் 48 ஆவது பிரிவில் அது உள்ளது. அதனை அப்படியே கீழே தருகின்றேன்.

"The state shall endeavor to organise agriculture and animal husbandry on modern and scientific lines and shall, in particular, take steps for preserving and improving the breeds and prohibiting the slaughter of cows and calves and other **milch** and draught cattle"

இதில் எங்கும் பசு புனிதம் என்பது போன்ற மதச் சார்புடைய சொற்கள் ஏதும் இல்லை. அது மட்டுமின்றி, இந்நெறிமுறை பசுக்களுக்கு மட்டுமே சொல்லப்படவில்லை. "MILCH' என்ற சொல்லை நாம் கவனிக்க வேண்டும். அதற்குக் "கறவைப் பசு" என்றே பொருள். "பால் தருவன" என்னும் பொருளும் சொல்லப்படுகின்றது. அப்படிப் பார்த்தால் ஆடு, ஒட்டகம் எல்லாம் அடங்கும்.

பசு என்று மட்டுமே பொருள் கொண்டாலும், அது கறவைப் பசுவை மட்டுமே குறிக்கும். மடி வற்றிப்போன பசுக்களைக் குறிக்காது. அவற்றை என்ன செய்வது? எனவே உழவுக்கு உதவாத காளைகளையும், கறவை வற்றிப் போன பசுக்களையும் இறைச்சிக்காக வெட்டுவதை எந்தச் சட்டமும் தடுக்கவில்லை. மேலும் வழிகாட்டு நெறிமுறை என்பது பரிந்துரைதானே தவிர, சட்டம் இல்லை.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, நாட்டின் வளர்ச்சி, அறிவியல் முன்னேற்றம், எல்லோர்க்கும் கல்வி என்பன போன்றவை பின்னுக்குத் தள்ளப்பட்டு, மதமும், மதம் சார்ந்த அரசியலும் மட்டுமே பாஜாகவால் இங்கு முன்னெடுக்கப்படுகின்றன. இந்தப் போக்கு, நாட்டை அழிவுப்பாதையை நோக்கியே செலுத்தும்.

பா.ஜ.க. ஆட்சி இப்படியே நீடித்தால், இறுதியில் மாடுகள் எல்லாம் வாழ்ந்து கொண்டிருக்கும், மனிதர்கள் எல்லோரும் செத்துப் போயிருப்பார்கள்! ●



## பேராசிரியர்

# பூ.ஆலாலசுந்தரனார்

மறக்க முடியுமா?

● எழில்.இளங்கோவன்

டில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்ற என் நண்பர் ஒருவர் நல்ல படிப்பாளி, நிறைய படித்திருக்கிறார்.

அவரிடம் நான் கேட்டேன், "பூ.ஆலாலசுந்தரனார் குறித்து உங்களிடம் செய்தி ஏதாவது இருக்கிறதா?"

அவர் சொன்னார், "இந்தப் பெயரையே நீங்கள் சொல்லித்தான் நான் கேள்விப்படுகிறேன்"

சென்னைப் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்ற ஒரு நண்பரிடமும் இதே கேள்வியைக் கேட்டேன்.

"இந்தப் பெயரை எங்கேயோ கேள்விப் பட்டு இருக்கிறேன். ஆனால் அவரைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது!" இப்படிச் சொன்னார் அவர்.

ஒன்று மட்டும் எனக்குத் தெளிவாகப் புரிந்தது.

டாக்டர் மு.வரதராசனார், பேராசிரியர் அப்பாதுரையார், பேராசிரியர் கே.கே. பிள்ளை போன்ற அறிஞர்கள் பெயர்களைச் சொன்னால் புரிந்து கொள்கிறார்கள்.

டாக்டர் மா.இராசமாணிக்கனார், தி.வை.சதாசிவப் பண்டாரத்தார், ஔவை துரைசாமி ஆகியோரைக் கொஞ்சம் இடைவெளி விட்டாவது புரிந்து கொள்கிறார்கள்.

பெருமழைப் புலவர், மே.வீ.வேணுகோபாலப் பிள்ளை, கரந்தை உமாமகேசுவரனார் போன்ற அறிஞர் பெருமக்களை இன்றையத் தமிழ்ச் சமூகம் மறந்துவிட்டது அல்லது மறந்து கொண்டு இருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும்.

அந்த வரிசையில் பேராசிரியர் பூ.ஆலாலசுந்தரனாரும் இருக்கிறார்.

சென்னையில் இருக்கும் புகழ்பெற்ற கல்லூரிகளுள் ஒன்று சென்னைக் கிருத்துவக் கல்லூரி. சென்னையை அடுத்துள்ள தாம்பரத்தில் இக்கல்லூரி இருக்கிறது. இக்கல்லூரியின் தமிழ்ப் பேரவை சார்பில் ஒரு கூட்டம் 21.10.1961 அன்று கல்லூரியில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சிறப்புரையாளர், அறிஞர் அண்ணா அவர்கள். தலைமை பேராசிரியர் கேதாரநாதன் வரவேற்புரை ஆலாலசுந்தரனார். இவர்தான் இக்கூட்டம் நடைபெற மூல காரணமானவராக இருந்தவர்.

இந்தக் கூட்டத்தில்தான் அண்ணா பேசுவதற்குத் 'தலைப்பு இல்லை' என்று கூட்ட ஏற்பாட்டாளர் சொல்ல, அண்ணா அதையே தலைப்பாக பேசினார். இதோ

"மாணவர் தலைவரிடம் நான் என்ன தலைப்பில் பேச வேண்டும் என்று கேட்டேன். எனக்குத் தலைப்பு இல்லை என்றார். எனவே தலைப்பு இல்லை என்பதையே தலைப்பாக்கிக் கொண்டு உங்களுடன் உரையாட விழைகிறேன்.

"எனது நண்பரான உங்கள் பேராசிரியர் ஆலாலசுந்தரனார் என் வலப்புறத்தில் அமர்ந்திருக்கிறார். அவருக்கு என் இடப்புறக் (இடதுசாரி) கருத்துகள் மிகவும் பிடிக்கும். அவருக்கும் எனக்கும் சுமார் 30 ஆண்டு கால நட்பு என்பதை இம் மாமன்றத்தில் சொல்வதில் அகம் மகிழ்கிறேன். சிறந்த தமிழ்க் கல்வியைத் தமிழ்ப் பற்றோடு, தமிழ்ப் பண்போடு, தாம் கற்ற கல்வியை மற்றவர்களுக்குப் பயிற்றுவிக்கின்ற பெரும்பணியில் ஆலாலசுந்தரனார் ஈடுபட்டிருக்கிறார் என்பதைக் கண்டு பூரிப்படைகிறேன்" என அறிஞர் அண்ணாவால் பாராட்டப் பெற்றவர் பேராசிரியர் ஆலாலசுந்தரனார் அவர்கள்.

இவரின் தாயார் இராசம்மாள். தந்தையார் வேலு (செட்டியார்). 1907ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 5ஆம் நாள் இவர் பிறந்தார்.

1917 தொடக்கம் 1927ஆம் ஆண்டுவரை இவர் சென்னை முத்தியால் பேட்டை உயர்நிலைப்பள்ளியில் படித்தார். 1927ஆம் ஆண்டு இவர் பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்து இடைநிலை வகுப்பில் சிறந்த மாணவராகத் தேர்ச்சிப் பெற்றார்.

இவரின் கல்லூரிக்காலத் தோழர்களாக




இருந்தவர்கள் அறிஞர் அண்ணா, நடேச முதலியார், அப்பாண்டை ராஜா ஆகியோர்.

அன்றைய காலகட்டத்தில் பச்சையப்பன் கல்லூரியில் இளங்கலைப் பட்டப் படிப்புப் பாடப்பிரிவு தொடங்கப்படவில்லை. அதனால் அக்கல்லூரியின் முதல்வர் சின்னதம்பிப்பிள்ளை சுந்தரனாருக்கு ஒரு பரிந்துரைக் கடிதம் கொடுத்து, அவரை, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி வைத்தார்.

பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படித்த அவரின் தமிழ்ப் புலமை, ஆர்வம் ஆகிய பண்புகளைக் கண்டறிந்து, இவரின் கல்விச் செலவுக்குப் பெரிதும் உதவியவர், இராஜா சர். எம்.ஏ.முத்தையா செட்டியார் அவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

1932ஆம் ஆண்டு பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேரவைக்குச் செயலாளர் ஆனார். 1934ஆம் ஆண்டு அப்பல்கலைக் கழகத்தில் இளங்கலைப் பட்டம் பெற்ற இவர், அதைத் தொடர்ந்து முதுகலைப்பட்டமும் பெற்றார்.

அக்காலத்தில் இன்றைய புகழ்பெற்ற சென்னைக் கிருத்துவக் கல்லூரி, சென்னை முத்தியால் பேட்டை, லிங்கி செட்டித் தெருவில் இயங்கிவந்தது.

கல்லூரி நடைபெற்ற அதே கட்டிட வளாகத்தில்தான், அக்கல்லூரியின் நிர்வாகத்தின் கீழ் கிருத்தவ உயர்நிலைப் பள்ளியும் இயங்கிவந்தது.

இங்கே ஆலாலசுந்தரனார் முதல் முதலாகத் தமிழாசிரியராகப் பணியேற்றார். பள்ளியும் கல்லூரியும் ஒரே கட்டிட வளாகத்தில் இருந்ததனால், தமிழ் மொழி ஆசிரியரான சுந்தரனார் பள்ளியிலும் கல்லூரியிலும் பாடம் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

அதனை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்ட இவர், பள்ளிக்கூட இறுதியாண்டு மாணவர்களிடம், கல்லூரிக்கான புகுமுக வகுப்புப் பாடங்களையும் சேர்ந்து சொல்லிக் கொடுத்துள்ளார்.

இந்நிலையில் இட நெருக்கடி காரணமாக, சென்னை முத்தியால் பேட்டையில் இருந்த கிருத்துவப் பள்ளியை அங்கேயே வைத்துக் கொண்டு, கல்லூரியை மட்டும், சென்னை கிருத்துவக் கல்லூரி என்ற பெயரில், சென்னையின் நுழைவு வாயிலாக இருக்கும் தாம்பரத்திற்கு மாற்றினார்கள்.

இம்மாற்றத்தின் போது ஆலாலசுந்தரனாரும் தாம்பரம் கிருத்துவக் கல்லூரிக்கு மாற்றப்பட்டார்.

1951ஆம் ஆண்டு இவர் கல்லூரியின் பேராசிரியர் ஆனார். அதே ஆண்டு தமிழ்த்துறைத் தலைவராகவும் நியமிக்கப் பட்டார்.

1964ஆம் ஆண்டு தொடக்கம் 68ஆம் ஆண்டு வரை கல்லூரியின் தமிழ் மொழித்துறைத் தலைவராகப் பொறுப்பேற்று அரும் பணி ஆற்றியுள்ளார்.

1968 தொடக்கம் 1973ஆம் ஆண்டு வரையும், இந்தியப் பல்கலைக் கழக மானியக்குழு ஆராய்ச்சிப் பேராசிரியராகப் பணியாற்றிய ஆலாலசுந்தரனார்.

1973 முதல் 1980 வரை அக்கல்லூரியின் மதிப்புறு பேராசிரியராகப் பணியாற்றியிருக்கிறார்.

அப்போது கிண்டியில் இருந்த கல்லூரி மாணவர் விடுதியில், ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் சென்று இலவசமாகத் திருக்குறள், திருவாசகம், கந்தரனுபூதி ஆகியவை குறித்தப் பாடங்களை நடத்தி இருக்கிறார்.

அப்படி அவர் தொடர்ச்சியாக பாடம் நடத்தியது 15 ஆண்டுகள் என்பது குறிக்கத்தக்கது.

1. இயற்றமிழ், 2. கட்டுரை விருந்து, 3. சுந்தரச் சொல்லோவியம், 4. சென்னை கந்தகோட்டத் தலபுராண உரை

போன்ற நூல்களை எழுதியதோடு, 80க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி மற்றும் இலக்கியக் கட்டுரைகள் எழுதி இருக்கிறார்.

தமிழகத்தின் முன்னால் ஆளுநராக இருந்த மைசூர் ஜெயசாமராஜ உடையாருக்குத் தமிழ் கற்றுக் கொடுத்த ஆசிரியரான பேராசிரியர் பூ.ஆலாலசுந்தரனார் மறக்கக் கூடியவரா? அல்லது அவரை மறக்கத்தான் முடியுமா?

இன்று அவர் நம்மிடம் இல்லை.●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.